# அருப்புக்கோட்டை நகராட்சி

விளம்பி ஆண்டு ஆவணி மாதம் நாள் : 10.09.2018 திங்கள் கிழமை மாலை 3.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :– திரு.சு.சு.சுரேஷ்குமார்**
**தனி அலுவலர்**

**பொருள் 1 :** தேசிய மக்கள் தொகை பதிவேடு (NPR - Register) தொடர்பான விபரத் தொகுப்புகள் NPR பதிவேட்டில் Onlne மூலம் Data Entries பதிவேற்றம் செய்திட வரப்பெற்றுள்ள அரசு உத்தரவினைத் தொடர்ந்து அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் வார்டு எண் 36 வரையிலான மொத்தமுள்ள 188 Enumeration Block க்குகளுக்கான Data Entries, Charge officer, அருப்புக்கோட்டை நரராட்சி அவர்களுக்குண்டான server system மூலம் upload செய்திட மடிக்கணினி (LapTop) ஒன்றினை புதிதாக வாங்கிட அல்லது வாடகைக்கு பெற்று பணி முடியும்வரை பயன்படுத்திடவும், மேற்படி பணிக்குத் தேவையான Switch Box with pluck, pin & wire வுடன் புதிதாக வாங்கிடவும், தேவைப்படும் இதர ஸ்டேஷனரி பொருட்கள் வாங்கிடவும் ரூ.30,000/– வரை செலவாகலாம். மேற்படி செலவினை மன்ற கூட்ட முன் அனுமதியுடன் செலவு செய்திட மன்ற கூட்ட அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்98/2016/சி2

**அலுவலகக் குறிப்பு :–**
மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் :</u>**
அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
**<u>தீர்மான எண்.494</u>**

**பொருள் 2 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான திருப்புவனம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து (வைகை குடிநீர் திட்டம், Local Source) அருப்புக்கோட்டை வரை உள்ள 43.65 கி.மீ. நீளத்திற்கு போடப்பட்டுள்ள 18” RCC Pipe, 15” RCC Pipe, 12” RCC pipe மற்றும் 18’’ CI pumping main–களில் ஏற்படும் கசிவுகள் மற்றும் உடைப்புகளை உடனுக்குடன் சரி செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கும் மற்றும் அருப்புக்கோட்டை நகர்பகுதிகளில் வார்டு 1 முதல் 36 வரை குடிநீர் விநியோகத்திற்காக போடப்பட்டுள்ள பகிர்மான குழாய்களின் மொத்த நீளம் 105.00 கி.மீ. மேலும் PVC மற்றும் CI பகிர்மான குழாய்களில் ஏற்படும் கசிவுகள் மற்றும் உடைப்புகளை உடனுக்குடன் சரிசெய்து பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கான ஆண்டு பராமரிப்புக்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.7,00,000/–க்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.421, நாள்.15.05.2018ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 30.08.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.M.N.எர்ஷாத்கான் அருப்புக்கோட்டை | 0.01%மதிப்பீட்டு விலையைவிட குறைவாக |
| 2. | திரு. M.N.காத்துான்பீவி அருப்புக்கோட்டை | 9.79 %மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |

**<u>அலுவலகக் குறிப்பு :–</u>**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.01 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.M.N.எர்ஷாத்கான், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

மேலும் மேற்கண்ட குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 4893/2018/இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.495**

**பொருள் 3** : நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.எம்.எஸ் 73, நாள் 19.07.2018 மற்றும் அரசாணை எண்.76, நாள் 26.07.2018ல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் 01.04.2018 முதுல் பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்படவேண்டும் என உத்தரவிடப்பட்டு, மேற்படி உத்திரவு நகர்மன்ற தீர்மானம் எண்.487 நாள் 24.08.2018ன்படி மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/ஆர்1 நாள் 21.08.2018ல் மேற்படி சொத்துவரி சீராய்வுக்கு, நகரில் தற்போது உள்ள பகுதிகளை கட்டிடம் அமைந்துள்ள அமைவிடம் பயன்பாடு, மற்றும் அடிப்படை வசதிகள் போன்ற காரணங்களை கருத்திற்கொண்டு 3 மண்டலஙகளாக பிரித்து அம்மண்டலஙகளுக்கு அடிப்படை மதிப்பு (Basic Value) தேர்வு செய்து அதன் அடிப்படையில் 01.04.2017 முதல் 31.03.2018 வரை ஏற்படுத்தப்பட்ட புதிய சொத்துவரி விதிப்புகள் மற்றும் மறுஅளவீடு செய்து விதிக்கப்பட்ட வரி விதிப்புகள் தவிர்த்து மற்ற சொத்து வரி விதிக்கப்பட்ட அனைத்து கட்டிடஙகளுக்கும் வரி சீராய்வு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி நகரில் உள்ள 36 வார்டுகளிலுள்ள தெருக்களை இணைப்பில் கண்டுள்ளவாறு 3 மண்டலஙகளாக பிரித்து கீழ்க்கண்டவாறு அடிப்படை மதிப்பு (Basic Value) நிர்ணயம் செய்யப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **ஏற்கனவே உள்ள மண்டலம்/அடிப்படை மதிப்பு விபரம் (01.04.2008 முதல்)** | | **தேர்வு செய்யப்பட்டுள்ள மண்டலம் /அடிப்படை மதிப்பு விபரம் (01.04.2018 முதல்)** | |
|---|---|---|---|
| **மண்டலம்** | **அடிப்படை மதிப்பு ரூ.** | **மண்டலம்** | **அடிப்படை மதிப்பு ரூ.** |
| A | 1.10 | A | 1.65 |
| B | 0.80 | B | 1.20 |
| C | 0.50 | C | 0.75 |

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் 7282/2018/அ2

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.496**

**பொருள் 4 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 10 இரட்டைபடை மாரியம்மன் கோவில் தெரு, அம்பலஅப்பன் தெரு, வார்டு எண் 36 சுப்புராஜ் நகர் மெயின் தெரு, குழந்தைவேல் புரம் தெரு ஆகிய தெருக்களில் சிறுபாலஙகள் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.1.30 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–**

1. மன்றம் அனுமதிவழஙகலாம்.
2. மேலும் குடிநீர்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 8531/2018/இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.497</u>**

**பொருள் 5 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொசு புழு ஒழிப்பு பணிக்காக பயன்படுத்தப்படும் பிளிச்சிங பவுடர் மற்றும் சுண்ணாம்புதுாள் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு

**1.** ஸ்ரீ கொண்டாளம்மாள் லிமிடெட் சுண்ணாம்புதுாள் 1 டன் ரூ. 13600/–
பிளிச்சிங பவுடர் 1 மூடை (25 கிலோ) ரூ.700/–

**2.** ஸ்ரீ கணேஷ் ஏஜென்ஸி சுண்ணாம்பு துாள் 1டன் ரூ.14500/–
பிளிச்சிங பவுடர் 1 மூடை (25 கிலோ) ரூ.750/–

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஸ்ரீ கொண்டாளம்மாள் லிமிடெட், குல்லுார்சந்தை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழுங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழுங்கலாம்.
2. பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி ஆணையாளரின் முன்அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழுங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 6889/2018/எச்2

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அஙகீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.498</u>**

**பொருள் 6 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரம் வாகன எண் TN67BY 8520 வாகனஙகளுக்கு 17.10.2018 முதல் தகுதிச்சான்று முடிவடைவதால் மேக்ண்ட வாகனத்திற்கு பழுது பணிகள் பார்க்க வேண்டியுள்ளது. மேற்கண்ட கனரக வாகனத்தின் பழுதுபணிகள் பார்ப்பதற்கு மோட்டார் வாகன சட்டம் G.O.Mu.No.983 Home (Transport IV) Dept Dt:03.08.2004 ன்படி அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை ரூ.27600/– ஆகும். எனவே மேற்கண்ட தொகைக்கு பொது சுகாதார பணி அவசரம் கருதி நகராட்சி பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–**

மன்றம் அனுமதிவழுஙகலாம்.

ந.க.எண். 8459/2018/எச்2

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அஙகீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.499</u>**

**பொருள் 7 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரம் வாகன எண்.TN67BY 8537 வாகனஙகளுக்கு 17.10.2018 முதல் தகுதிச்சான்று முடிவடைவதால் மேற்கண்ட வாகனத்திற்கு பழுது பணிகள் பார்க்க வேண்டியுள்ளது. மேற்கண்ட வாகனத்தின் பழுது பணிகள் பார்ப்பதற்கு மோட்டார் வாகன சட்டம் G.O.Mu.No. Home (Transport IV) Dept Dt:03.08.2004ன்படி அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை ரூ.20475/– ஆகும். எனவே மேற்கண்ட தொகைக்கு பொது சுகாதார பணி அவசரம் கருதி நகராட்சி பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழுஙகலாம். ந.க.எண். 7459/2018/எச்2

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அஙகீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.500</u>**

**பொருள் 8 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரம் வாகனஙகளான TATA ACE வாகன எண்.TN67 BY8842, TN67 BY 8824, TN67 BY 8836, TN67 BY 8820, TN67 BY 8843 ஆகியவாகனஙகளுக்கு 03.11.2018 பழுது பணிகள் பார்ப்பதற்கு மோட்டார் வாகன சட்டம் G.O.Mu.No.983 Home (Transport IV) Dept Dt :03.08.2004 ன்படி அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை வாகனம் ஒன்றிற்கு ரூ.20475/– வீதம் 5 வாகனஙகளுக்கு ரூ.1.03 இலட்சம் ஆகும். எனவே மேற்கண்ட தொகைக்கு பொது சுகாதார பணி அவசரம் கருதி நகராட்சி பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண். 8336/2018/எச்2

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.501</u>**

**பொருள் 9 :** விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சியின் 2017–18ம் ஆண்டிற்குரிய நிர்வாக அறிக்கை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம். ந.க எண் 8508/2018/சி1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.502</u>**

**பொருள் 10 :** விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சியில் நேதாஜி சாலையில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகனமேடை பராமரிப்பு பணியானது M/s.அருவை டிரஸ்ட் தொண்டு நிறுவனம், அருப்புக்கோட்டை மூலம் மேற்கொள்ள 28.09.2017 அன்று வேலை உத்தரவு ஒரு ஆண்டுக்கு வழஙகப்பட்டது. தற்சமயம் மேற்படி தொண்டு நிறுவனத்தின் பராமரிப்பு காலம் கடந்த 27.09.2018 அன்று முடிவடைய உள்ளது. எனவே தொடர்ந்து இப்பணி மேற்கொள்ள M/s.அருவை டிரஸ்ட் தொண்டு நிறுவனம் நீட்டிப்பு செய்ய கடிதம் வழஙகியுள்ளது. எனவே இப்பணி குறித்து மன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம் ந.க எண் 7526/2016/இ1

**<u>தீர்மானம் :</u>**

M/s.அருவை டிரஸ்ட் தொண்டு நிறுவனம் அவர்களுக்கு மேலும் ஓராண்டு காலம் பராமரிப்பு பணி செய்ய கால நீட்டிப்பு வழஙக தீர்மானிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.503</u>**